அவைக்குறிப்பில் ஏறாது. (குறுக்கீடு) திரு. பரிதி இளம்வழுதி உட்காருகிறீர்களா? அல்லது வெளியேறுகிறீர்களா? (குறுக்கீடு) பரிதி இளம் வழுதியை அப்புறப்படுத்த மார்ஷலுக்கு உத்தரவிடுகிறேன். (குறுக்கீடு) பரிதி இளம்வழுதியை அப்புறப்படுத்த உத்தரவிடுகிறேன். (குறுக்கீடு) பரிதி இளம்வழுதியை அப்புறப்படுத்த உத்தரவிடுகிறேன். (குறுக்கீடுகள்) பரிதி இளம்வழுதி காவலர்களோடு மோதுவது சரியில்லை. அவர்கள் அப்புறப்படுத்த வந்தால் அவர்களோடு போகவேண்டியதுதான். பரிதி இளம்வழுதி தகராறு செய்யக்கூடாது.

(திரு. இளம்வழுதி பேரவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டார்)

திரு. திருநாவுக்கரசு, உங்களுக்கும் சொல்கிறேன், உங்கள் அறிவிப்பை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. (குறுக்கீடு) உங்களுடைய அறிவிப்பை நான் ஏற்றுக்கொள்ளவில்லை (குறுக்கீடு), திரு. திருநாவுக்கரசு வெளியேறவேண்டும். (குறுக்கீடு) திரு. திருநாவுக்கரசு வெளியேறவேண்டும். (குறுக்கீடு) அதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. நான் அனுமதி மறுத்து இருக்கிறேன். அனுமதி மறுத்த பிரச்சினையை இங்கே பேச முடியாது. (குறுக்கீடு) மார்ஷல் திரு. திருநாவுக்கரசை வெளியேற்றவும்.

(திரு. எஸ். திருநாவுக்கரசு பேரவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டார்.)

4. அறிவிப்பு

பல்கலைக்கழகங்களின் ஆட்சிமன்றப் பேரவை, ஆட்சிக்குழு மற்றும் நிர்வாகக் குழுக்களுக்கு உறுப்பினர்கள் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தமிழ்நாட்டில் உள்ள சில பல்கலைக் கழகங்களின் ஆட்சிமன்றப் பேரவை (செனட்), ஆட்சி குழு (சிண்டிகேட்) மற்றும் நிர்வாகக்குழு ஆகியவற்றுக்கு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கவேண்டும் என கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன.*

சென்னையில் உள்ள அண்ணா பல்கலைக் கழக ஆட்சிக்குழு (சிண்டிகேட்)விற்கு ஒரு உறுப்பினர், தஞ்சாவூரில் உள்ள தமிழ் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவைக்கு இரண்டு உறுப்பினர்கள்,

மதுரை காமராஜர் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவைக்கு 4 உறுப்பினர்கள், திருச்சிராப்பள்ளியில் உள்ள பாரதிதாசன் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவைக்கு 2 உறுப்பினர்கள், திருநெல்வேலியில் உள்ள மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக் கழக ஆட்சிமன்றப் பேரவைக்கு 2 உறுப்பினர்கள் மற்றும் கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக நிர்வாகக் குழுவிற்கு அதாவது 'போர்ட் ஆப் மேனேஜ்மென்ட்'க்கு ஒரு உறுப்பினர் ஆகியோரை சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் தங்களிலிருந்து தேர்ந்தெடுக்க வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் பதவிக்காலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து 3 ஆண்டுகளாகும். தேர்ந்தெடுக்கப் படவிரும்பும் உறுப்பினர்கள் தங்களின் நியமனத்தாள்களை 7-11-1994 திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள்கள் வேண்டுவோர் பேரவைச் செயலாளரிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம். நியமனத்தாள்கள் 8-11-1994 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 9-11-1994 புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக்கொள்ளலாம். நியமனம் செய்யப்படவேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமானால் தேர்தல் நடத்தும் தேதி பற்றி பின்னர் அறிவிக்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது.

பிற்பகல் 12-05

3. தகவல் கோரல்--தொடர்ச்சி

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் குறித்து--தொடர்ச்சி

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே சில உறுப்பினர்கள் அனுமதி இல்லாமல் சில கருத்துக்களைத் தெரிவித்தார்கள். அவர்கள் தெரிவித்த கருத்துக்களை சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்பிலே ....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அப்போதே சொல்லியிருக்கிறேன். அவைகள் அவைக் குறிப்பில் இருக்காது. இதுபற்றி பத்திரிகைகளும் வெளியிடமாட்டார்கள். அவைக் குறிப்பிலே இல்லாத எந்த ஒரு பிரச்சினையையும் பத்திரிகைகள் வெளியிடமாட்டார்கள்.